# கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்

வா.சா.1 – மேகநாதன் OS.No. 23/2021 நாள் : 25.02.2025

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் 14.12.2009 ஆம் ஆண்டிலிருந்து முனிவீரன்பட்டி அரசுப்பள்ளியில் ஆசிரியராக இருக்கிறேன். வழக்கு சொத்து விபரங்கள் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி சுப்ரமணியன் என் தகப்பனார். என் தாத்தா பெயர் பக்கிரிசாமி படையாட்சி. என் தாத்தா பக்கிரிசாமி படையாட்சி 1987 இல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் பாட்டி 1988 இல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் தாத்தா பக்கிரிசாமி படையாட்சிக்கு சுப்ரமணியன், நாகமுத்து, ராஜாங்கம், சாமிதுரை ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சுப்ரமணியன், நாகமுத்து ஆகியோர்தான் தரப்பினர் என்றால் சரிதான். சாமிதுரை மற்ற மகன்களான ராஜாங்கம், சாமிதுரை ஆகியோர் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். என் தாத்தா பக்கிரிசாமி படையாட்சி உயிருடன் இருந்தபொழுது அவரது மகன்களுக்கு வாய்மொழியாக சொத்துக்களை பிரித்துவிட்டார் என்றால் சரிதான். வாசாஆ.1 என் தகப்பனார் சுப்ரமணியனின் வம்சாவழிப்பட்டியல் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு அந்த வாய்மொழி பாகப்படி கிடைத்த சொத்துக்களில் நான் பாகம் கேட்டு இந்த வழக்கை போட்டிருக்கிறேன் என்றால் சரிதான். பக்கிரி வாரிசுகளுக்கு சொத்து சம்மந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும், அவரவர் சொத்துக்களை அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பூர்வீக சொத்து என்று எனக்கு இல்லை என்றால் சரியல்ல. பக்கிரி படையாட்சிக்கு உள்ள சொத்துக்கள் குறித்த ஆவணங்களை நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன்.

பக்கிரிபடையாட்சியின் காலிமனை சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் தாத்தாவிற்கு பூர்வீக சொத்துக்கள் எதுஎது என்று நான் வழக்கில் தனியாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்களில் எந்தெந்த இடங்களை அரசாங்கம் எவ்வளவு தொகைக்கு ஆர்ஜிதம் செய்தது என்று நான் வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அரசாங்கம் எங்களுடைய பூர்வீக சொத்துக்களை ஆர்ஜிதம் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா சுப்ரமணியன் தலைமையாசரியராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். என் தகப்பனார் சுப்ரமணியன் பெயரில் வாங்கிய சொத்துக்கள் அவர் ஆசிரியர் வருமானத்தில் இருந்து கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் அது உண்மையல்ல. என் தாயார் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களும் என் தகப்பனார் வருமானத்தில் இருந்து கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. எந்தெந்த பூர்வீக சொத்துக்களை எவ்வளவு தொகைக்கு என் தகப்பனார் விற்று வேறு சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்று நான் வழக்கில் தனித்தனியாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்து எதுவும் கிடையாது என்றாலும், எல்லா சொத்துக்களும் என் தகப்பனார் தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றாலும் சரியல்ல. வழக்கில் 1வது அயிட்ட சொத்து என் தகப்பனாரும், அவரது சகோதரர் நாகமுத்துவும் 1980 இல் அவர்களது தனிப்பட்ட உழைப்பின் மூலம் கிடைத்த வருமானத்தை வைத்து கிரையம்

வாங்கினார்கள் என்றாலும் அது முற்றிலும் தவறு. 02.11.2005 இல் என் தகப்பனார் கிரையம் வாங்கியபொழுது நான் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று வழக்கில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் ரூ.38000/– அப்பொழுது பணம் கொடுத்தேன். அந்த சொத்து 1 ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றாலும், நான் இதில் ஒருபோதும் கிரையம் வாங்க பணம் கொடுக்கவில்லை என்றாலும் அது முற்றிலும் தவறு. 18.02.2021 இல் இந்த வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகள் 8 ஆம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்ததாக நான் சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. இந்த 1ம் அயிட்ட சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு முற்றிலும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அந்த 1வது அயிட்ட சொத்தில் நான் எந்த உரிமையும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. எனக்கு உரிமை உள்ளது. வழக்கில் 2முதல் 4அயிட்ட சொத்துக்கள் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கும் அதில் உரிமை உள்ளது. 1ஆம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது மனைவியும் எனது தாயாருமான வளர்மதிக்கு வாசாஆ 7 படி தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்திருப்பதால் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 5அயிட்ட சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதனை வாசாஆ 8 படி அவரது மகள் சத்தியபாமாவிற்கு எழுதிக்கொடுத்திருப்பதால் எனக்கு அதில் உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 6 முதல் 10அயிட்ட சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு வாய்மொழி பாகப்படி ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவை என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அதிலும் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றாலும் சரியல்ல. 6 முதல்

10 அயிட்ட சொத்துக்களை என் பெயருக்கு 29.03.2012 ஆம் தேதி தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் தற்பொழுது என் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களை என் அம்மா மருத்துவ செலவிற்காக ஈடு வைத்து அது மூழ்கிப்போய்விட்டது. என் அம்மா மருத்துவ செலவிற்காக 8 ஆம் அயிட்ட சொத்தை 13 ஆம் பிரதிவாதி ஜெயலெட்சுமி பெயருக்கு 20.10.2014 அன்று நான் கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தேன் என்றால் ஆமாம். அது சம்பந்தமான வழக்கு ஜெயங்கொண்டம் கோர்ட்டில் உள்ளது. என் தாயார் 28.09.2013 இல் இறந்துவிட்டார். என் தாயார் மருத்துவ செலவிற்காக சொத்தை நான் விற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 6 வது அயிட்ட சொத்தை 9 ஆம் பிரதிவாதி பொன்னுசாமிக்கு 15.03.2013 அன்று நான் கிரையம் செய்துகொடுத்தேன் என்றால் சரிதான். 9 ஆம் பிரதிவாதிக்கு நான் கிரையம் கொடுத்து கிரைய தொகையாக ரூ.10,85,000/- வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. ஐந்து இலட்சம் மட்டும்தான் வாங்கினேன். 9 ஆம் பிரதிவாதிக்கு சர்வேஎண்.47/3A, 1 ஏர்ஸ் இடத்தை ரூ.60,000/-ம் பேசி 05.03.2014 அன்று நான் கிரையம் கொடுத்தேன் என்றால் அது முற்றிலும் தவறு. இந்த வழக்கு நான் பாகப்பிரிவினைக்காக மட்டும்தான் போட்டிருக்கிறேன். கிரைய பத்திரங்களை இரத்து செய்ய பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். 6 முதல் 10 அயிட்ட சொத்துக்கள் என் தகப்பனார் எனக்கு தானசெட்டில்மெண்டில் அடங்கிய சொத்துக்கள் என்பதால் அந்த சொத்தையும் சேர்த்து நான் வழக்கு தொடர்ந்து பாகப்பிரிவினை கேட்க முடியாது என்றால் சரியல்ல. 13.03.2021 அன்று இந்த வழக்கில் 2 முதல் 8 பிரதிவாதிகள் என்னிடம் இடையூறு

செய்ததாக நான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 27.02.2021 ஆம் தேதி என் மனைவி மற்றும் என் மகன் மற்றும் எனக்கு வேண்டிய நபர்கள் சேர்ந்து 1 ஆம் பிரதிவாதியிடம் தகராறு செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த தகராறில் 1 ஆம் பிரதிவாதிக்கு காயம் ஏற்பட்டு கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு நாங்கள் காரணமல்ல. நான் கிரையம் கொடுத்த நபர்களுக்கு எதிராக இந்த வழக்கில் தனியாக விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை என்றாலும், என் தகப்பனாரின் வருமானத்தில் தான் சொத்துக்கள் என் தாயார் பெரியல் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் 1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள், 1 ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அதில் நான் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. எனவே, நான் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒப்பம்.திருமதி.T.மலர்வாலண்டினா,
கூடுதல் மாவட்ட நீதிபதி(மு.கூ.பொ),
அரியலூர்.